# தக்கார் குரல்

TNBIL/25/A2396

மலர் 1 | இதழ் 9 | ஜூன் 2026 | மாத இதழ் | விலை ரூ.25
Volume 1 | Issue 9 | June 2026 | Monthly Magazine | Price RS.25








## அதிமுகவுக்கு குறி

### இருதுருவ அரசியலுக்கு நகர்த்துகிறாரா விஜய்?



## ‘தளராத தளிர்கள்’

### தாம்பரம் போலீஸ் அசத்தல்




## இலக்கை எட்டுவார்களா ‘சிங்கப் பெண்கள்?’



## விளைச்சலும் இல்லை; விலையும் இல்லை

### குப்பையில் கொட்டப்படும் மாம்பழங்கள்


தக்கார் குரல்
TNBIL/25/A2396
மலர் 1 இதழ் 1 அக்டோபர் 2025 மாத இதழ் விலை ரூ.25
அண்ணாமலையின் அரசியல் கணக்கு
மலைக்க வைக்கும் மயக்க மருந்து மருத்துவம்!
நீலகிரி வரையாடுகள் எண்ணிக்கை!
உங்களைப் பார்த்தால் பயமாய்த்தான் இருக்கிறது விஜய்


தக்கார் குரல்
TNBIL/25/A2396
மலர் 1 இதழ் 2 நவம்பர் 2025 மாத இதழ் விலை ரூ.25
நாகூர் தர்காவில் ஊழலா?
அதிமுக கோட்டையை தகர்க்கும் திமுக?
போலீஸ் கையிலெடுத்த புதிய உத்தி!


தக்கார் குரல்
TNBIL/25/A2396
மலர் 1 Volume-1 இதழ் 3 Issue 3 டிசம்பர் 2025 December 2025 மாத இதழ் Monthly Magazine விலை ரூ.25 Price RS.25
ஒற்றைத் தேங்காய் லட்சம் ரூபாய்!
ஆன்லைனில் ரூ.150 கோடி ஸ்வாகா!
கந்தூரி விழாவில் கலகம்
S.I.R.-ஐ எதிர்ப்பது ஏன்?
EXCLUSIVE


தக்கார் குரல்
TNBIL/25/A2396
மலர் 1 Volume-1 இதழ் 4 Issue 4 ஜனவரி 2026 January 2026 மாத இதழ் Monthly Magazine விலை ரூ.25 Price RS.25
ரவுடிகள் உருவாவது எங்கிருந்து?
'ரவுடியிஸத்துக்கு சமூகமே பொறுப்பு'
- நேர்காணல்
பாம்பை ஏவி தந்தை கொலை
-பின்னணி
பித்தப்பை கல் அதிகரிக்கும் ஆபத்து
பொறுப்பு டிஜிபி தொடர்வது நல்லதா?


தக்கார் குரல்
TNBIL/25/A2396
மலர் 1 Volume-1 இதழ் 5 Issue 5 பிப்ரவரி 2026 February 2026 மாத இதழ் Monthly Magazine விலை ரூ.25 Price RS.25
முற்றும் மோதல் திணறும் வி.ஐ.பி வேட்பாளர்கள்
தலைநகரை உலுக்கிய கொலை


தக்கார் குரல்
TNBIL/25/A2396
மலர் 1 Volume-1 இதழ் 6 Issue 6 மார்ச் 2026 March 2026 மாத இதழ் Monthly Magazine விலை ரூ.25 Price RS.25
பழிதீர்க்கும் ஈரான் அமெரிக்க தளத்தை தாக்கிய முதல்தேசம்
விவாகரத்து கோரும் விஜய் மனைவி
பின்னணியில் அரசியலா?
மதுராந்தகம் தொகுதி அசத்தும் எம்எல்ஏ
- நேரடி கள ரிப்போர்ட்


தக்கார் குரல்
TNBIL/25/A2396
மலர் 1 Volume 1 இதழ் 7 Issue 7 ஏப்ரல் 2026 April 2026 மாத இதழ் Monthly Magazine விலை ரூ.25 Price RS.25
சாத்தான்குளம் வழக்கு 9 காவலர்களுக்கு தூக்கு
தீர்ப்பில் விளாசிய நீதிபதி
தனது கட்சியை தானே தோற்கடித்த கமல்
ஈர்ப்பை இழந்த தேர்தல் அறிக்கைகள்


தக்கார் குரல்
TNBIL/25/A2396
மலர் 1 Volume 1 இதழ் 8 Issue 8 மே 2026 May 2026 மாத இதழ் Monthly Magazine விலை ரூ.25 Price RS.25
மக்களின் முதல்வரான விஜய்..
தொடர விடுவார்களா?
முதலமைச்சர்
முடிவுக்கு வந்தது இருதுருவ அரசியல்
குதிரை பேர குற்றச்சாட்டு விஜய் அரசுக்கு முதல் சவால்


தக்கார் குரல்
TNBIL/25/A2396
மலர் 1 Volume 1 இதழ் 9 Issue 9 ஜூன் 2026 June 2026 மாத இதழ் Monthly Magazine விலை ரூ.25 Price RS.25
அதிமுகவுக்கு குறி
இருதுருவ அரசியலுக்கு நகர்த்துகிறாரா விஜய்?
'தளராத தளிர்கள்'
தாம்பரம் போலீஸ் அசத்தல்
இலக்கை எட்டுவார்களா 'சிங்கப் பெண்கள்?'
விளைச்சலும் இல்லை; விலையும் இல்லை

தக்கார் குரல்

வெளியீட்டாளர் - ஆசிரியர்
**S.யூசுப் பாஷா**

வழிகாட்டுதல் குழு
**ஜோதிமணி,** மேனாள் நீதியரசர் உயர் நீதிமன்றம்
**ராஜதுரை**, மூத்த பத்திரிகையாளர்
**கே.ராஜேந்திர பிரபு,** மூத்த பத்திரிகையாளர்
**ஆஷிஸ்**, சட்ட ஆலோசகர்

பொறுப்பாசிரியர் **S.சஞ்சய்காந்தி**
உதவி ஆசிரியர்கள்
**விஜயலட்சுமி** பின்லாந்து
**ஜோதி நரசிம்மன், S.சக்தி பாரதி**

சென்னை- நிருபர்கள்
தலைமை நிருபர் **பாலாஜி**
தலைமை புகைப்பட கலைஞர் **சதீஷ்**

மாவட்ட செய்தியாளர்கள்
சென்னை - **M.ஹர்ஷத்**
உயர் நீதிமன்றம் - **க.முகேஷ்**
புதுச்சேரி - **ஏ.கே.ஆர்**
காஞ்சிபுரம்- **கவி பாலா,**
**ராஜா** புகைப்படக்கலைஞர்
இராணிப்பேட்டை - **ராஜீவ்**
மதுரை - **கோபி கிருஷ்ணன்**
கொடைக்கானல் - **கணேசன்**
திருச்சி - **புவனேஸ்வரி**
கோவை - **அருண் சங்கீத்**
ராமநாதபுரம் - **கவின்**
போடி - **விஜய்**
இணையதள ஆசிரியர்- **தீப்நாத்**
விஷூவல் எடிட்டர் - **E.காலித்**
டிஜிட்டல் மார்க்கெட்டிங் - **யுகேந்திரன்**

வடிவமைப்பு
**பாரதி டிசைனர்ஸ்,**
மதுரை

மின்னஞ்சல்
thakkaarkural@gmail.com
Cell: 75500 50088

செய்திகளை உடனுக்குடன் அறிய உங்கள் போனில்
ThakkaarKural App-ஐ
டவுன்லோடு செய்யுங்கள்

இணையதள முகவரி
www.thakkaarkural.com

# இருதுருவ அரசியலுக்கு நகர்த்துகிறாரா விஜய்?

2026 சட்டப்பேரவைத் தேர்தல்களுக்குப் பிறகு மிகவும் பாதிக்கப்பட்ட கட்சிகள் என்றால் இரண்டுதான். ஒன்று மம்தா பானர்ஜியின் திரிணமூல் காங்கிரஸ். மற்றொன்று அதிமுக. தேர்தல் தோல்வி, கட்சிகளை எப்படி புரட்டிப்போடும் என்பதற்கு இவை உதாரணங்களாகி நிற்கின்றன.

திரிணமூலின் சட்டப்பேரவை உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்கும் மேற்பட்டோர் தனித்து செயல்படத் தொடங்கிவிட்டனர். அதேபோலதான் அந்த கட்சிகளின் எம்.பி.க்களும். ஏறக்குறைய, மம்தா பானர்ஜி தனது கட்சியின் மீதான பிடியை இழந்துவிட்டார் என்றே கூறலாம்.

தமிழகத்தில் நிலவரம் வேறுவகையில் உள்ளது. அதிமுக கரையத் தொடங்கியிருக்கிறது. அக்கட்சியின் முன்னாள் அமைச்சர்கள், மாவட்ட செயலாளர்கள், முன்னாள் எம்எல்ஏக்கள் என பலர் தவெகவில் இணைந்து வருகின்றனர். சிட்டிங் எம்எல்ஏக்களில் 4 பேர் ராஜிநாமா செய்துவிட்டு தவெகவில் இணைந்தது வேறு விவகாரம்.

ஆனால், திடீரென அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக போர்க்கொடி தூக்கி, நம்பிக்கை வாக்கெடுப்பில் தவெக அரசுக்கு ஆதரவாக வாக்களித்த அதிமுக எம்எல்ஏக்கள் அனைவரும் மீண்டும் மன்னிப்புக் கடிதம் கொடுத்து எடப்பாடியாரிடம் சரண்டரானது வேறுவிவகாரம். அந்த வகையில் பார்த்தால் மம்தா அளவுக்கு எடப்பாடியார் பலவீனமடையவில்லை. அதிமுக பெரும் உட்கட்சி குழப்பத்தை சந்தித்துள்ளது. ஆனால், தளர்ந்துவிடவில்லை. அதிமுகவின் வாக்கு வங்கியும், 2024 லோக்சபா தேர்தலைவிட, 2026 பேரவைத் தேர்தலில் அதிகரித்துள்ளது.

கட்சியை விட்டு அகலும் சீனியர்களின் இடத்தை நிரப்ப புதியவர்கள் ஆர்வத்துடன் முன்வருகின்றனர். ஆக, நிர்வாகிகளும், தொண்டர்களும் அதிமுக கட்சியின் மீது பாசத்துடன் இருந்தாலும், மக்கள் செல்வாக்கு பழையபடி இல்லாததால் தொடர் தோல்வியில் உள்ளது அந்த கட்சி.

இப்போது அது அல்ல கேள்வி. அதிமுக தொடர்ந்து ஏன் குறிவைக்கப்படுகிறது. விஜய், அதிமுகவை முற்றிலும் அழித்துவிட நினைக்கிறாரா? அவரது திட்டம்தான் என்ன?

தனது கட்சிக்கு உட்கட்டமைப்பு இல்லாததை உணர்ந்துள்ள விஜய், அதை சீக்கிரம் அமைத்துவிட விழைகிறார். உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பாக வலிமையான, பொருளாதார பலம்மிக்க மாவட்ட, ஒன்றிய, கிளைக்கழக நிர்வாகிகளை நியமித்துவிட



நினைக்கிறார். அத்தகைய அனுபவமும், பொருளாதார பலமும் மிக்கவர்கள் இருப்பது கழகங்களில்தான். அவற்றில் அதிமுக கட்சி நிர்வாகிகளை தன்வயப்படுத்திவிட முடியும் என நினைக்கிறார் விஜய். இதன்மூலம் இரட்டைப்பலன். தன் கட்சி பலம்பெறுகிறது. பிரதான கழகம் ஒன்று காலியாகிறது.

இதன்மூலம் விஜய் VS உதயநிதி என்ற நிலையை ஏற்படுத்த முடியும். அப்படி வந்தால், மக்கள் செல்வாக்கு எப்போதும் விஜய்க்குத்தான் கிடைக்கும். இதுதான் தவெகவின் திட்டம். மேலும், தொடர் தோல்வியில் உள்ள அதிமுகவை காலி செய்வதும் விஜய்க்கு நடைமுறையில் எளிதாக உள்ளது. விஜயின் சினிமா பிரபல்யமும், இனி அதிமுக எழுவது கடினம், இனி எதிர்காலம் விஜய்க்குதான் என்று உருவாக்கப்படும் பிம்பமும் இதன் அடித்தளம்.

ஆக, விஜய் தொடர்ந்து கூறிவருவதுபோல, தவெக VS திமுக என்று களத்தை நிரந்தரமாக்கிவிட்டால், அதாவது, தற்போது மூன்று துருவ அரசியலில் அதிமுகவை அகற்றி, இருதுருவ அரசியலாக்கிவிட்டால், தான் நிரந்தர முதல்வராகிவிட முடியும் என்பது அவரது எண்ணம். அதிமுகவின் வாக்குகளில் 50 சதவீதத்துக்கு மேல் தன்வசம் வந்தாலே அது சாத்தியமாகிவிடும் என்று காய் நகர்த்துகிறார் விஜய்.

இருக்கலாம். நல்லதொரு அரசியல் கணக்குதான். இது சாத்தியமா?. ஒரு கட்சியின் இருத்தலை தீர்மானிப்பது அதன் தேவைதான். அதிமுகவின் தேவை சமூகத்துக்கு இன்னும் இருக்கிறதா?

அரசியல், சமூக, பொருளாதார ரீதியில் அதிமுக தமிழகத்துக்கு ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. எம்ஜிஆரின் சத்துணவு திட்டம், ஜெயலலிதாவின் தொட்டில் குழந்தை திட்டம், 69% இடஒதுக்கீடு மற்றும் அம்மா உணவகம், எடப்பாடியாரின் குடிமராமத்துப் பணி, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மருத்துவக் கல்வியில் 7.5% உள்ஒதுக்கீடு ஆகியவை சமூகத்தை புரட்டிப் போட்ட வரலாற்று திட்டங்களாகும்.

இத்தகைய சமூகநீதி மற்றும் அரசியல் பார்வையோடு தவெக செயல்பட்டால் மட்டுமே அதிமுகவின் இடத்தை நிரப்ப முடியும். அதற்குரிய அறிவும், ஆற்றலும் தவெகவுக்கு இருக்க வேண்டும். அதுவே உண்மையான, ஆரோக்கியமான அரசியலுக்கு வித்தாக அமையும். எனவே, அதிமுகவின் இடத்தை தவெகவால் பூர்த்தி செய்துவிட முடியுமா?

இந்தக் கேள்விக்கு தவெகவின் செயல்பாடுகளும் காலமும்தான் பதில் சொல்ல முடியும். பொறுத்திருந்து பார்ப்போம்.

- சமூகநீதி கணக்காய்வு நடத்தப்படும்
- பொருளாதார மறுமலர்ச்சிக்கு அரசு வித்திடும்



# 4 ஆண்டுக்கு பிறகு முழுமையாக வாசிக்கப்பட்ட ஆளுநர் உரை



தமிழக சட்டப்பேரவையில் 4 ஆண்டுகளுக்கு பிறகு ஆளுநர் உரை முழுமையாக வாசிக்கப்பட்டது.

கடந்த திமுக ஆட்சியின்போது தமிழக ஆளுநராக இருந்த ஆர்.என்.ரவி, கடந்த 2022ம் ஆண்டு சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தில் தனது உரையை முழுமையாக வாசித்தார். அரசின் அறிவிப்புகள், திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

ஆனால், 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தில் உரையாற்றிய அன்றைய ஆளுநர் ஆர்.என். ரவி, தனது உரையில் இருந்த சுயமரியாதை, பெரியார், அம்பேத்கர், கருணாநிதி ஆகிய சொற்களை வாசிக்காமல் தவிர்த்துவிட்டார். இதனால் அவையில் சலசலப்பு ஏற்பட்டது.

அப்போது எழுந்து பேசிய அப்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அரசு கொடுத்த உரையில் இருப்பதுதான் அவைக்குறிப்பில் ஏற்றப்படும் என்று கூறியதும் ஆளுநர் ஆர்.என்.ரவி உடனடியாக அவையில் இருந்து வெளியேறினார்.

தொடர்ந்து, 2024 ஆம் ஆண்டு சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தில் பேச வந்த ஆளுநர் ஆர்.என்.ரவி தனது உரைக்கு முன்பு ‘தமிழ்த்தாய் வாழ்த்து’ மட்டும் பாடப்பட்டது; ‘தேசிய கீதம்‘ இசைக்கப்படவில்லை என்று கூறி, உரையை வாசிக்காமல் புறக்கணித்து சென்றார். ஆனாலும், ஆளுநரின் உரையை தமிழில் வாசித்த சபாநாயகர் அப்பாவுவின் பேச்சு அவைக்குறிப்பில் ஏற்றப்பட்டது.

கடந்த 2025 ஆம் ஆண்டு சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தில் பேச வந்த ஆளுநர் ஆர்.என்.



ரவி, முந்தைய ஆண்டில் கூறிய அதே காரணத்தை மீண்டும் கூறி, உரையை வாசிக்காமல் அவையில் இருந்து வெளியேறினார்.

2026 ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்ற முதல் சட்டசபை கூட்டத்திலும், தேசிய கீதம் பாடப்படவில்லை என்று கூறி, மீண்டும் உரையை வாசிக்காமல் ஆளுநர் ஆர்.என். ரவி வெளியேறினார்.

இப்படி, 2023 ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டு வரை 4 முறை ஆளுநர் ஆர்.என்.ரவி தனது உரையை முழுமையாக வாசிக்கவில்லை. தற்போது அவர், மேற்கு வங்க ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழகத்திற்கு இன்னும் புதிய ஆளுநர் நியமிக்கப்படவில்லை. பொறுப்பு ஆளுநராக இருந்து வரும் அர்லேகர் தமிழக சட்டமன்றத்தில் 4 ஆண்டுகளுக்குப் பிறகு ஆளுநர் உரையை முழுமையாக வாசித்துள்ளார்,

தமிழகத்தில் புதிதாக தவெக அரசு பொறுப்பேற்றுள்ள நிலையில், முதல் சட்டமன்ற கூட்டம் என்பதால் மரபுப்படி ஆளுநர் உரை நிகழ்த்துவது வழக்கம். அந்த வகையில் 17வது சட்டமன்றத்தில் உரையாற்றுவதற்காக கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் இருந்து ஜுன் 18ம் தேதி காலை ஆளுநர் அர்லேகர் காரில் புறப்பட்டார். காலை 9.30 மணிக்கு தலைமைச் செயலகம் வந்த அவருக்கு பிரதான கட்டிடத்தின் 2வது நுழைவு வாயில் அருகே காவல்துறை மரியாதை அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சபாநாயகர் ஜேசிடி. பிரபாகர், சட்டப்பேரவை செயலாளர் சாந்தி ஆகியோர் ஆளுநரை வரவேற்றனர். அதன் பிறகு சிவப்பு கம்பளத்தில் நடந்தபடி ஆளுநர் சட்டமன்ற கூட்டத்திற்கு வருகை தந்தார். காலை 10 மணிக்கு கூட்டம் தொடங்கியது.

தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடப்பட்டது. அதன் பிறகு தேசிய கீதம் பாடப்பட்டது. தொடர்ந்து ஆளுநர் தனது உரையை வாசிக்கத் தொடங்கினார்.

த.வெ.க.வின் கொள்கை தலைவர்களான பெரியார், காமராஜர், அம்பேத்கர், வேலுநாச்சியார், அஞ்சலை அம்மாள் ஆகியோரின் பெயரை எந்த தயக்கமும் இல்லாமல் உச்சரித்தார். உரையை அவர் ஆங்கிலத்தில் வாசித்து முடித்தவுடன், சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் தமிழில் வாசிக்கும் வரை பொறுமையோடு அங்கு அமர்ந்திருந்தார். அவர் வாசித்து முடித்தவுடன் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அதன் பிறகு புன்சிரிப்புடன் அனைவரிடமும் பிரியா விடை பெற்று சென்றார்.

## ஆளுநர் உரையின் சிறப்பம்சங்கள்

நிர்வாக அமைப்பில் மலிந்துள்ள ஊழலைக் களைந்து, நேர்மையான நிர்வாகத்தை

# மேகதாட்டு அணை கட்ட கடும் எதிர்ப்பு சட்டப்பேரவையில் தனித்தீர்மானம் நிறைவேற்றம்




மேகதாட்டு விவகாரத்தில் கர்நாடகா அரசை கண்டித்து தமிழக அரசு கொண்டுவந்த தனித் தீர்மானம் சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

தமிழக முதல்வர் விஜய் மேகதாட்டு விவகாரத்தில் கர்நாடகா நடவடிக்கையை எதிர்த்து அரசின் தனித் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

தொடர்ந்து பேசிய முதல்வர் அவர், “காவிரி நடுவர் மன்றம் 522007 அன்று அளித்த இறுதித் தீர்ப்பையும், உச்ச நீதிமன்றம் 1622018 அன்று அளித்த தீர்ப்பையும் மதிக்காமலும், சம்பந்தப்பட்ட படுகை மாநிலங்களின் இசைவைப் பெறாமலும், மத்திய அரசின் எந்தவித அனுமதியைப் பெறாமலும், கர்நாடக அரசு தன்னிச்சையாக காவிரி நதியின் குறுக்கே மேகேதாட்டுவில் அணை கட்ட முயற்சி மேற்கொள்வதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அதனால், கர்நாடக அரசின் இச்செயலுக்கு தனது கடும் எதிர்ப்பை இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது. கர்நாடக அரசின் மேகேதாட்டு அணைத் திட்டத்திற்கு தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் உள்பட எவ்வித அனுமதியும் அளிக்கக்கூடாது என மத்திய அரசை இப்பேரவை வலியுறுத்துகிறது.

கர்நாடக அரசு மேகதாட்டுவிலோ அல்லது காவிரிப் படுகையில் வேறு எந்த இடத்திலோ அணை அல்லது எவ்வித புதிய நீர்த்தேக்க திட்டத்தையோ, பிற படுகை மாநிலங்களின் இசைவு இன்றியும், மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமலும் மேற்கொள்ளக்கூடாது என கர்நாடக அரசுக்கு அறிவுறுத்துமாறு மத்திய அரசை இப்பேரவை வலியுறுத்துகிறது.

கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கையை பரிசீலிக்கவோ, அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளவோ அல்லது அதற்கு அனுமதி வழங்கவோ கூடாது என்று மத்திய நீர்வள குழுமத்தையும் இப்பேரவை வலியுறுத்துகிறது.

கர்நாடக அரசின் இந்த முயற்சியை முறியடித்து, தமிழக விவசாயிகள் நலனைப் பாதுகாத்திட தமிழ்நாடு அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இப்பேரவை தனது ஆதரவை ஒருமனதாக தெரிவித்துக்கொள்கிறது” என்றார்.

மக்களுக்கு வழங்குவதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. அதற்கேற்ப அனைத்து துறைசார்ந்த கொள்முதல்கள், டெண்டர்கள் ஒளிவுமறைவின்றி, கடுமையான கண்காணிப்பு வழிமுறைகளுக்கு உட்படுத்தப்படும்.

முறையற்ற நிதிப் பரிமாற்றங்கள், இடைத் தரகர்களின் தலையீடுகள் முற்றிலுமாக ஒழிக்கப்படும். கீழடி, ஆதிச்சநல்லூருக்கு



தீர்மானத்தின் மீது முதல் நபராக உரையாற்றிய காங்கிரஸ் அமைச்சர் ராஜேஷ்குமார், தீர்மானத்தை ஆதரித்தார். கர்நாடக அரசு, மேகதாட்டு அணை கட்டுவது உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிரானதாகும். இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால் காவிரி டெல்டா விவசாயிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகும். தமிழகத்தின் பல பகுதிகளும் பாதிக்கும். கர்நாடக அரசின் ஒருதலைப்பட்சமான நடவடிக்கையை காங்கிரஸ் கண்டிக்கிறது என்று அவர் பேசினார்.



தேமுதிக உறுப்பினர் பிரேமலதா பேசும்போது, மழைக்காலத்துக்கு முன்னதாக நீர் மேலாண்மையைப் பற்றி யோசிக்க வேண்டும். தமிழகத்தில் எங்கெல்லாம் நதிகளை இணைக்க முடியுமோ, அதைச் செய்ய வேண்டும். அனைத்துப் பகுதிகளையும் தூர்வார வேண்டும். மழை நீர் வீணாக கடலில் கலப்பதை தடுக்க வேண்டும் என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி பேசும்போது, தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அழிக்கும் முயற்சி மேகதாட்டு அணை. மேகதாட்டு அணை விவகாரத்தில் தமிழக அரசின் அனைத்து முயற்சிக்கும் திமுக உடன் நிற்கும். மேகதாட்டு பிரச்சினைகளுக்காக தனி நடுவர் மன்றம் அமைக்க தனித்தீர்மானத்தில் வலியுறுத்த வேண்டும் என்றார். தொடர்ந்து தனித்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. பிறகு பேசிய முதல்வர் விஜய், மேகதாட்டு பிரச்சினைக்காக எனது தலைமையில் 26.05.2026ல் பிரத்யேகமாக தனி நடுவர் மன்றம் அமைப்பது குறித்து சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து தனி நடுவர் மன்றம் அமைக்க தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்வைத்த கருத்தை தீர்மானத்தின் 4வது பத்திக்கு அடுத்து கூடுதலாக சேர்க்கலாம் என்றார். இதன்பின் திருத்தப்பட்ட தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.



யுனெஸ்கோவின் உலக பாரம்பரியச் சின்ன அங்கீகாரம் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

முல்லை பெரியாறு அணை நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்தவும், தென் மாநில நதிகளை இணைக்கவும், ஒலிம்பிக் உயர்திறன் மையங்கள் அமைக்கவும், வறுமையற்ற தமிழகம் உருவாக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஆசிரியர் காலிப்பணி யிடங்களை நிரப்ப போர்க்கால நடவடிக்கை எடுக்கப்படும். தமிழகத்தில் இருமொழிக் கொள்கையே தொடரும்.

தேசியக் கல்விக் கொள்கையை அரசு கடுமையாக எதிர்க்கிறது. முதலீட்டாளர் ஊக்குவிப்பு ஆணையம் ஏற்படுத்தப்படும். மாவட்டந்தோறும் சிறப்பு போதைப் பொருள் தடுப்புப் படை அமைக்கப்படும்.

தமிழகத்துக்கான நியாயமான நிதிப் பகிர்வை மத்திய அரசிடம் இருந்து பெறுவது உறுதி செய்யப்படும். மாநிலத்தின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய ‘வெற்றித் தமிழகம்’ தொலைநோக்குத் திட்டங்கள் அடுத்த 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். அரசால் அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் மாநிலத்தின் நிதிநிலையை சீரமைத்து வருங்காலத்தில் ஒவ்வொன்றாக நிறைவேற்றப்படும்.

ஒவ்வொரு சமூகத்திற்கும் உரிய அளவிலான பிரதிநிதித்துவம் கிடைப்பதே உண்மையான சமூக நீதி என்பது இந்த அரசின் அடிப்படை கொள்கை. இந்த கொள்கை மற்றும் வாக்குறுதியை நிறைவேற்ற சாதிவாரி கணக்கெடுப்பினை மக்கள்தொகை கணக்கெடுப்புடன் இணைந்து விரைந்து முடிக்க ஒன்றிய அரசை வலியுறுத்துவோம். ஒன்றிய அரசின் சாதிவாரி கணக்கெடுப்பு முடிந்த பின்னர் தமிழ்நாடு அரசு சமூகநீதி கணக்காய்வினை நடத்தும். இவ்வாறு ஆளுநர் உரையாற்றினார்.





# பராமரிப்பின்றி பாழாகும் அரசு பள்ளி

## சமூக விரோதிகள் கூடாரமான அவலம்

இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா வட்டம் பாகவளி பகுதியில் தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில், கடந்த 2010 2011 ஆம் நிதியாண்டில் நபார்டு **(NABARD)** நிதி உதவித் திட்டத்தின் கீழ், பொதுப்பணித்துறையின் மூலம் ரூ.77.11 லட்சம் மதிப்பீட்டில் புதிய அரசினர் உயர்நிலைப்பள்ளி கட்டிடம் கட்டப்பட்டது. கட்டுமானப் பணிகள் அனைத்தும் முழுமையாக நிறைவடைந்த நிலையிலும், கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தக் கட்டிடம் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படாமல் முடங்கிக் கிடக்கிறது.

தற்போது இந்தக் கட்டிடம் 'குடி' மகன்களின் புகலிடமாகவும், சமூக விரோதச் செயல்களின் கூடாரமாகவும் மாறிப் போய் உள்ளது அப்பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பயன்பாடின்றி பூட்டிக்கிடக்கும் இந்த அரசுப் பள்ளிக் கட்டிடத்தை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சமூக விரோதிகள், வகுப்பறைகளின் கதவுகள், ஜன்னல்கள், இரும்பு ஷட்டர் கேட்டுகள் மற்றும் மின்சார சுவிட்ச் பாக்ஸ்கள் உள்ளிட்ட அனைத்து இரும்பு மற்றும் மின் சாதனப் பொருட்களையும் திருடிச் சென்றுள்ளனர்.

இவை அனைத்திற்கும் மேலாக, மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தை வளர்க்க கட்டப்பட்ட அதிநவீன அறிவியல் ஆய்வகம் (**Science Lab**) முற்றிலும் உடைத்து, சிதைக்கப்பட்டு, சீர்குலைந்துள்ளது. மக்களின் வரிப்பணத்தில் கட்டப்பட்ட ஒரு பொதுச்சொத்து, அதிகாரிகளின் அலட்சியத்தால் இப்படிச் சீரழிந்து

**தமிழகத்தில் பொறுப்பேற்றுள்ள புதிய அரசும், இராணிப்பேட்டை மாவட்ட நிர்வாகமும் இந்த விவகாரத்தில் உடனடியாக தலையிட வேண்டும். பல லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு வீணாகிக் கொண்டிருக்கும் இந்தக் கட்டடத்தை உடனடியாக புனரமைத்து, பள்ளிப் பயன்பாட்டிற்கோ அல்லது வேறு ஏதேனும் பயனுள்ள அரசுத் துறையின் பயன்பாட்டிற்கோ கொண்டு வர வேண்டும் என்பதே அப்பகுதி மக்களின் கோரிக்கையாக உள்ளது.**









கொண்டிருப்பதாக அப்பகுதி மக்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

“மாணவர்களின் பாதுகாப்பு கருதி இந்தப் பள்ளிக்கு அனுமதி வழங்கப்படவில்லை” என அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. எனினும், ‘அதே பகுதியில் தனியார் பள்ளி ஒன்று இயங்கி வருவது மட்டும் எப்படி?’ என்று சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

“மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் நலனைக் கருத்தில் கொண்டு முறையான திட்டமிடலுடன் செயல்படுத்தி இருக்க வேண்டும். மக்களின் வரிப்பணத்தை வீணடித்துவிட்டு, இப்போது பாதுகாப்பு இல்லை என்று காரணத்தைக் கூறுவது நிர்வாகத் திறமையின்மையை காட்டுகிறது” என்று அவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

தற்போது தமிழகத்தில் பொறுப்பேற்றுள்ள புதிய அரசும், இராணிப்பேட்டை மாவட்ட நிர்வாகமும் இந்த விவகாரத்தில் உடனடியாக தலையிட வேண்டும். பல லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு வீணாகிக் கொண்டிருக்கும் இந்தக் கட்டடத்தை உடனடியாக புனரமைத்து, பள்ளிப் பயன்பாட்டிற்கோ அல்லது வேறு ஏதேனும் பயனுள்ள அரசுத் துறையின் பயன்பாட்டிற்கோ கொண்டு வர வேண்டும் என்பதே அப்பகுதி மக்களின் கோரிக்கையாக உள்ளது.

# குழந்தைகளை நல்வழிப்படுத்தும்

# “தளராத தளிர்கள்” ஆலோசனை மையம்

## தாம்பரம் மாநகர காவல் ஆணையர் அசத்தல்





“தளராத தளிர்கள்” குழந்தைகள் ஆலோசனை மையமானது தாம்பரம் மாநகர காவல் செம்மஞ்சேரி சரகத்துக்கு உட்பட்ட பெரும்பாக்கம் காவல் நிலைய எல்லையில் அமைந்துள்ள தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் வரவேற்பை பெற்ற இந்த “தளராத தளிர்கள்” ஆலோசனை மையத்தை அனைவருக்கும் பயனுள்ளதாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், காவல் இணை ஆணையர் திருமதி ஜெயந்தி, பள்ளிக்கரணை மாவட்ட காவல்துறை ஆணையர் திரு பொன் கார்த்திக் குமார் ஆகியோர் மேற்பார்வையில் செம்மஞ்சேரி சரக உதவி ஆணையர் வெங்கடேசன் கண்காணித்து வருகின்றார்.

தாம்பரம் மாநகர காவல் கண்ணகி நகர், செம்மஞ்சேரி, பெரும்பாக்கம் ஆகிய மூன்று காவல் நிலைய பகுதிகளில் சென்னையிலிருந்து இடம் பெயர்ந்து அரசால் குடியமர்த்தப்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் பூர்வீகத்தை விட்டு இடம்பெயர்ந்ததால் ஏற்பட்ட சிக்கலினால் குழந்தைகளின் கல்வி சரிவரத் தொடர முடியாமல் இங்கு வசிக்கும் குழந்தைகள் பலர் பள்ளிக்குச் செல்லாமல் இடை நின்றுள்ளனர். இதனால் குழந்தைகள் பல தீய பழக்கங்களுக்கு ஆளாகியுள்ளனர். இதில் மிகக் கொடுமையான விஷயம் என்னவென்றால் இவர்களின் தீய பழக்கத்திற்கு முக்கிய காரணமே அவர்களின் பெற்றோர்தான் என்றால் நம்ப முடிகிறதா?

ஆம், பல வீடுகளில் குடி போதைக்கு அடிமையான பெரியவர்களை பார்த்து குழந்தைகளும் அதை முயற்சி செய்கின்றனர் இதனால் அவர்களின் எதிர்காலம்




கேள்விக்குறியாகி விடுகிறது. இதில் பல மொட்டுக்கள் மலரும் முன்பே உதிர்ந்த அவலங்களும் உண்டு.

அதிலும் பள்ளிக்குச் செல்லாமல் இடை நின்ற பெண் குழந்தைகளின் நிலைமையை வேறு கோணத்தில் பார்க்க வேண்டியுள்ளது. இங்கு வளர் இளம் பருவ பெண்கள் சிறு வயதிலேயே காதல் என்ற மாய வலைக்குள் சிக்கி தன் வாழ்க்கையின் வசந்தத்தை தொலைத்து நிற்கின்றனர். 18 வயதிற்கு உட்பட்ட குழந்தை பருவம் மாறாத எத்தனையோ பெண் குழந்தைகள் இந்த காதல் மோகத்தால், தானும் ஒரு குழந்தைக்கு தாயாகி நிற்கும் அவல நிலைக்கு தானே வலிய வந்து விழுகின்றனர்.

மேலும் இப்பகுதியில் இளைஞர்கள் பலர் படித்தும் தகுதியான பணிகளுக்கு செல்லாமல் சும்மாவே சுற்றித் திரிவதில் ஆர்வம் காட்டி வந்தனர். இதனால். அப்பகுதியில் இளைஞர்களுக்கு இடையேயான மோதல் வெட்டுக்குத்து வரை தனது பாதையை விரிவு படுத்திக் கொண்டு வருகிறது. எனவே, இப்பகுதியில் குற்ற செயல்கள் அதிகளவில் நடைபெற்று வருகின்றன. எனவே இப்பகுதிகளில் இளம் சிறார்கள் குற்றவாளியாக உருவாகாமல் தடுக்கவும் கல்வியில் அவர்களை மேம்படுத்தவும் காவல்துறை சார்பாக ஒரு மாபெரும் தீர்வு மேற்கொள்ளப்பட்டது.

அப்போதைய காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக் உத்தரவின் பேரில் காவல் கூடுதல் ஆணையர் மகேஸ்வரி தலைமையில் பள்ளிக்கரணை மாவட்ட காவல் துணை ஆணையர் கார்த்திகேயன் மற்றும் செம்மஞ்சேரி சரக உதவி ஆணையர் வைஷ்ணவி ஆகியோரின் மேற்பார்வையில் ஆபரேஷன் பெரும்பாக்கம் என்று ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

பெரும்பாக்கம், கண்ணகி நகர், செம்மஞ்சேரி ஆகிய பகுதியில் ஒரு மாபெரும் மாற்றத்தை கொண்டு வர வேண்டும் என்பதற்காகவே காவல்துறை இந்த திட்டத்தை செயல்படுத்த தொடங்கியது. அதில் முதல் கட்டமாக அந்தப் பகுதி முழுவதும் சுமார் 500 தூய்மைப் பணியாளர்களை வைத்து ஒரே நாளில் அந்தப் பகுதியை தூய்மைப்படுத்தும் மாபெரும் தூய்மை பணி நடத்தப்பட்டது. பெரும்பாக்கம் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் சுமார் 215க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் உள்ளன.

இதில் சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வசிக்கின்றனர். இங்கு வசிக்கும் அனைத்து மக்களின் விவரங்களை சேகரித்த காவல்துறை அதிலிருந்து பள்ளிக்குச் செல்லாத குழந்தைகளின் தகவல்களை தனியே சேகரித்து அந்த குழந்தைகளுக்கு முறையான கவுன் சிலிங் வழங்கி அவர்களை பள்ளிகளில் சேர்த்து விட்டுள்ளனர்.

மேலும் இங்கு வசிக்கும் மக்களுக்கு ஒரு whatsapp குரூப் ஆரம்பித்து அதில் அவர்களின் குறை எதுவாக இருந்தாலும் சம்பந்தப்பட்ட துறைகளை தொடர்பு கொண்டு



மக்களின் குறைகளை தீர்ப்பதில் காவல்துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும் படித்துவிட்டு வேலைக்கு செல்லாமல் சுற்றித்திரிந்த இளைஞர்களுக்கு கவுன் சிலிங் கொடுத்து அவர்களுக்கு தொண்டு நிறுவனங்கள் மூலம் திறன் வளர்ச்சி பயிற்சி அளித்து நல்ல நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தியுள்ளனர். அது மட்டுமல்லாது இந்த பகுதிகளில் வசிக்கும் மக்களுக்காக மிகப்பெரிய வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு அதில் அனைத்து தரப்பினருக்கும் வேலைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பணிகளை மேற்கொள்ள உதவி ஆய்வாளர் சுஜாதேவி மற்றும் காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காக மட்டும் கடந்த 03.07.2025 ம் தேதி தாம்பரம் மாநகர காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக் உத்தரவின்பேரில், "தளராத தளிர்கள்" குழந்தைகள் ஆலோசனை மையம் பெரும்பாக்கத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. அதன் மூலம் தாம்பரம் மாநகர காவல் எல்லைக்குட்பட்ட அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் போதை, போக்ஸோ சட்டம் மற்றும் கல்வி பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இப்பகுதியில் பள்ளியில் இடை நின்ற சுமார் 150க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டு மீண்டும் பள்ளிகளில் சேர்த்து விடப்பட்டுள்ளனர்.





மேலும் மாணவர்களுக்கு அவர்கள் திறனை வளர்த்துக் கொள்ளும் வகையில் அடிக்கடி விளையாட்டுப் போட்டிகள், பேச்சுப்போட்டி, கட்டுரை போட்டி ஓவியப் போட்டி, நடன போட்டி ஆகியவற்றை நடத்தி அவர்களை ஊக்கப்படுத்தப்படுகிறது. இங்கு ஆலோசனைக்கு வந்து செல்லும் குழந்தைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறார்கள். முக்கியமாக தீய பழக்கங்களுக்கு உட்பட்ட குழந்தைகள், போக்சோ வழக்கில் பாதிக்கப்பட்ட குழந்தைகள், பள்ளி செல்லாத குழந்தைகள் மற்றும் பள்ளி கல்லூரிகளில் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளும் குழந்தைகள் அனைவருக்கும் ஆலோசனை வழங்கப்பட்டு அந்த தகவல்கள் ரகசியமாக பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆலோசனை மையத்திற்கு வரும் குழந்தைகளுக்கு செங்கல்பட்டு மாவட்ட சமூக நலத்துறை அலுவலர்கள் மூலமும் ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது.

தளராத தளிர்கள் ஆலோசனை மையம் துவங்கப்பட்ட பின்பு, கடந்த 03.07.2025 முதல் 31.12.2025 வரை 114 குழந்தைகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. 2026ம் ஆண்டில் இதுவரை 49 குழந்தைகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த குழந்தைகள் பற்றிய விவரங்கள் ரகசியமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு பெண்கள் பாதுகாப்பு போக்சோ சைபர் கிரைம் மற்றும் காவல் உதவி ஆப் பற்றிய விழிப்புணர்வு தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

அதுபோல ஆண்களுக்கும் போதை விழிப்புணர்வு நடத்தி போதைக்கு அடிமையாகி இருக்கும் நபர்களை தகுந்த மருத்துவமனை மூலம் அதிலிருந்து மீண்டு வர சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மேலும் இப்பகுதியில் வசிக்கும் திருநங்கைகள் மற்றும் திருநம்பிகள் ஆகியோரின் வாழ்வாதாரத்தை மனதில் கொண்டு அவர்களுக்கு விழிப்புணர்வு அளித்து வேலை வாய்ப்பு ஏற்பாடு மற்றும் சிறு தொழில் மேற்கொள்வதற்கான உதவிகளும் செய்யப்பட்டு வருகிறது. மேலும் தாம்பரம் மாநகர காவல் எல்லைக்கு உட்பட்ட அதிகமாக பெண்கள் பணிபுரியும் நிறுவனங்களில் அவர்களுக்கும் விழிப்புணர்வு அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் இதுவரை எங்கும் இல்லாத ஒரு செயல் திட்டமாக தாம்பரம் மாநகர காவலில் இயங்கி வரும் இந்த "தளராத தளிர்கள்" ஆலோசனை மையம் மூலம் குழந்தைகள் அதிகப் பயன் பெற்றுள்ளனர். பொதுமக்களும் தயக்கமின்றி நட்பு முறையில் காவல்துறையை அணுகுகின்றனர். இது சம்பந்தமாக முன்னாள் தலைமை செயலர், "தளராத தளிர்கள்" போன்று ஒரு ஆலோசனை மையத்தை சென்னையிலும் தொடங்க வேண்டும் என்று சென்னை மாநகர காவல் ஆணையருக்கு உத்தரவு பிறப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பெண்களின் பாதுகாப்பு மற்றும் குழந்தைகளின் வளர்ச்சியை முன்னிறுத்தி தற்போதுள்ள அரசு சிங்கப்பெண் போன்ற பல திட்டங்களை செயல்படுத்தி வரும் நிலையில் இந்த தளராத தளிர்கள் போன்ற மையத்தையும் அனைத்து மாவட்டங்களிலும் நிறுவினால் நிச்சயம் குழந்தைகள் தவறான பாதையில் செல்லாமல் நல்வழியில் செல்வார்கள் என்பதில் ஐயமில்லை.

# தவெகவில் இணைந்த சி.மகேந்திரன்

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு நெருடல்



1952 இல் நடைபெற்ற மெட்ராஸ் மாகாணத்துக்கான தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி 62 இடங்களில் வெற்றி பெற்றது. தோழர் ஜீவா சட்டமன்றத்தில் காங்கிரஸ் கட்சிக்கு சிம்ம சொப்பனமாக இருந்தார்.

அத்தகைய பாரம்பரியம் மிக்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பிற்காலத்தில் இரண்டாக பிரிந்தபோதும், தனது கொள்கை பிடிமானத்திலிருந்து தளர்ந்ததில்லை. கம்யூனிஸ்ட் கட்சிகளின் பொதுவுடமை கோட்பாடுதான் அதன் தலைவர்களையும், தொண்டர்களையும் பிணைக்கும் பசையாகும். அத்தகைய தலைவர்களும், தொண்டர்களும் வேறு சித்தாந்தங்களை நோக்கியோ, வேறு கட்சிகளை நோக்கியோ நகர மாட்டார்கள்.

ஆனால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரான சி.மகேந்திரன் அண்மையில் விஜய் தலைமையிலான தவெகவில் இணைந்தது, அரசியல் களத்தில் பெரும் அதிர்ச்சியையும், வியப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அவர் கூறும்போது, "நான் ஏன் இப்போது தவெகவுக்கு வந்தேன் என்பது மிகவும் முக்கியமான கேள்வி. சிவப்புத் துண்டுடன் தவெகவில் பயணிக்க விரும்புகிறேன். இதற்கு காரணம், என் வாழ்நாள் முழுவதும் சிந்தித்து நிறைவேற்ற முடியாத பிரச்சினை ஊழல் ஒழிப்புதான். இதை ஒழிக்க முடியும் என்ற நம்பிக்கையை முதல்வர் விஜய் கொடுத்துள்ளார். அதனால்தான் இங்கு இணைந்தேன்.

எனது அரசியலில் நான் வியந்து பார்த்த ஒரு விஷயம், இந்த தேர்தல் சாதியை ஒழித்திருக்கிறது. சாதியை ஒழிக்க வேண்டும், ஒழிக்க வேண்டும் என கூறினார்கள்; ஆனால் ஒழிக்க முடியவில்லை. இந்தத் தேர்தல் சாதி, மதம், ஏழை பணக்காரன் என்ற வேறுபாட்டை போக்கி, இந்திய ஜனநாயகத்தில் ஒரு சராசரி குடிமகனும் தேர்தலில் நின்று வெற்றி பெற்று வர முடியும் என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அதை சாதித்தவர் முதல்வர் விஜய்.

இந்த தேர்தலில் காசு, பணம் இல்லாதவன் வெற்றி பெற முடியும் என்பது நிரூபித்து காட்டப்பட்டிருக்கிறது. இதை ஜனநாயகத்தின் ஒரு புரட்சியாக நான் கருதுகிறேன். இது கட்சிகளை கடந்து, நமது வேறுபாடுகளை கடந்து எளிய மக்களுக்கான, அதாவது பெரியார், மகாத்மா, அம்பேத்கர் ஆகியோர் எடுத்த இயக்கமாக இது வளர வேண்டும். அதற்கான விதை தற்போது போடப்பட்டிருக்கிறது.

அனைவரும் ஒருங்கிணைந்து இதை செய்ய வேண்டும் என இங்கு இணைந்துள்ளேன். பொதுவுடமையின் வேர்கள் மேலும் பலப்படக் கூடிய விதத்தில் நானும் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்துள்ளேன்" என்று தெரிவித்தார்.

பெரும்பான்மையற்ற நிலையில் இருந்த விஜய் கட்சிக்கு, காங்கிரஸ், விசிக, ஐயூஎம்எல் ஆகிய கட்சிகள் உள்ளிருந்தும், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் வெளியிலிருந்தும் ஆதரவு தெரிவித்து வருகின்றன. தனது ஆட்சிக்கு சட்டப்பேரவைக்குள் ஆதரவு தெரிவித்து வரும் ஒரு கட்சியிலிருந்தே மூத்த தலைவர் ஒருவரை தவெகவில் இணைத்திருப்பது அரசியலில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. இது இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு நெருடலாக இருக்கும் என்றே பார்க்கப்படுகிறது.

# வெற்றி இலக்கை எட்டுமா சிங்கப்பெண் அதிரடிப் படை?




ம.வி.ராசதுரை

தமிழ்நாட்டின் முதலமைச்சர் விஜயின் கனவுத் திட்டமான சிங்கப்பெண் அதிரடிப் படையின் தொடக்க விழா கடந்த 9ம் தேதி சென்னை எழும்பூரில் உள்ள ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்றது.

தனி சீருடை, தனி இலட்சினையுடன் முழுக்க முழுக்க பெண் போலீசாரை கொண்ட சிங்கப்பெண் அதிரடிப் படைத் திட்டத்திற்காக முதல் கட்டமாக ரூபாய் 357 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. டிஜிபி மகேஷ் குமார் அகர்வால், சென்னை மாநகரக் காவல் ஆணையாளர் அமல்ராஜ் முன்னிலையில் இந்தப் படையின் செயல்பாட்டைத் துவக்கி வைத்த முதலமைச்சர் விஜய், சிங்கப் பெண் அதிரடிப்படையின் ஒரு ரோந்து வாகனத்தை தானே ஓட்டி அந்த மைதானத்தில் இருந்த காவலர்கள் அனைவரையும் உற்சாகப்படுத்தினார்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கும் கடுமையான தண்டனைகள் வழங்குவதற்கும் பல்வேறு சட்டங்களும் ஏற்பாடுகளும் தற்போது இருந்த போதிலும், சிங்கப்பெண் அதிரடிப்படை திட்டம் அனைவரையும் ஈர்த்துள்ளதற்குக் காரணங்கள் உள்ளன.

திறமை வாய்ந்த காவல் உயர் அதிகாரிகளுள் ஒருவராகக் கருதப்படும் ஐ.ஜி. பவானீஸ்வரி இப்படைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தகுதி வாய்ந்த பெண் போலீசார் தமிழ்நாடு முழுவதும் பரவலாக தேர்வு செய்யப்பட்டு இதில் இணைக்கப்பட்டுள்ளனர்.

முதல் கட்டமாக இவர்கள் தமிழ்நாட்டில் 70 பிரிவுகளாக செயல்படத் தொடங்கியுள்ளனர். சென்னையில் மட்டும் 12 படைக்குழுக்கள்





களத்தில் உள்ளன. படிப்படியாக இந்தக் குழுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட உள்ளது. பெண்கள் மீதான குற்றங்களைத் தடுப்பதற்கும் குற்றம் நடந்த இடத்திற்கு மின்னல் வேகத்தில் வருவதற்கும் இவர்கள் எப்போதும் ரோந்து வாகனத்தில் தயார் நிலையில் இருப்பார்கள்.

அந்தந்த மாவட்டத்தின் காவல் கண்காணிப்பாளர் மேற்பார்வையில் செயல்படத் தொடங்கியுள்ள இப்பிரிவு போலீசாரின் எண்ணிக்கை நாளடைவில் அதிகரிக்கப்பட உள்ளது.

குற்றங்கள் நிகழக்கூடிய இடங்கள் அடையாளம் காணப்பட்டு, அங்கு கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை இப்படைப் பிரிவு மேற்கொள்ளத் தொடங்கிவிட்டது. குற்றங்களில் ஈடுபடுவோரை உடனடியாகப் பிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவது இவர்களுடைய முக்கியமான பணியாக இருக்கும்.

உள்ளூர் காவல் நிலையங்களுடன் இணைந்து செயல்படும் இவர்களை எளிதாக தொடர்பு கொள்ளும் வகையில் அவசர உதவி தொடர்பு எண்களான 100, 112 மற்றும் 1091 ஆகியவை பயன்படும்.

குற்றவாளிகளைப் பிடிக்கச் செல்லும்போது அவர்கள் தாக்குதல் நடத்தும் பட்சத்தில் அதைத் தடுத்து எதிர்த்தாக்குதல் நடத்தும் சிறப்புப் பயிற்சி இவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அண்மையில், தென் மாவட்டத்தில் ரவுடித்தனத்தில் ஈடுபட்டவர்களை உடனடியாக பிடித்ததில் ட்ரோன்கள் முக்கியப் பங்கு வகித்தன. சிங்கப்பெண் அதிரடிப்படைக்கும் முதல் கட்டமாக 48 ட்ரோன்களும் நவீன போக்குவரத்து வாகனங்களும் வாங்கப்பட உள்ளது.

சிங்கப்பெண் படையினர் மனதளவிலும் உடலளவிலும் தொழில் நுட்ப ரீதியாகவும் வலுவாக இருக்க பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த அதிரடித் திட்டம் குறித்து விவரித்த முதலமைச்சர் விஜய், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நிகழ்வதற்கு அடிப்படை போதைதான் என்பதை சுட்டி காட்டியது குறிப்பிடத்தக்கது. எனவேதான் விஜய் தலைமையிலான அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதும் 717 டாஸ்மாக் மதுபானக் கடைகள் மூடப்பட்டது. வழிபாட்டு இடங்கள் மற்றும் பள்ளிக்கூடங்கள் அருகில் இவை இருந்தன என்று கூறப்பட்டாலும் தமிழ்ச் சமூகத்தை புரையோடச் செய்துவிட்ட போதைப் பழக்கத்திலிருந்து படிப்படியாக மக்களை மீட்க விஜய் மேற்கொண்ட முதல் கட்ட நடவடிக்கைதான் இது என்று அக்கட்சி வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கை பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. இதற்கு முன்




திமுக, அதிமுக அரசுகள் இருந்தபோது, டாஸ்மாக் வருமானத்தில் ஒரு பகுதி அரசு கஜானாவுக்கு போகாமல் ஆட்சியாளர்களுக்கு சென்றது. தற்போதைய விஜய் தலைமையிலான தவெக ஆட்சியில், ரூபாய் 1200 கோடி டாஸ்மாக் வருமானம் ஆட்சியாளர்களுக்கு செல்லாமல் அரசு கஜானாவுக்கு சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

துரதிஷ்டவசமாக மூடப்பட்ட 717 டாஸ்மாக் கடைகளின் முகவரியைக் கேட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சமூக ஆர்வலர்கள் விண்ணப்பித்தபோது சரியான தகவலை தமிழக அரசு கொடுக்கவில்லை. இதுபோன்ற செயல்கள் நடைபெறாமல் முதலமைச்சர் விஜய் பார்த்துக் கொள்ள வேண்டும். 717 கடைகளின் முகவரியை வெளி யிட்டால்தான் அரசு வெளியிடும் அறிவிப்புகள் மீது நம்பகத்தன்மை ஏற்படும்.

டாஸ்மாக் மதுக் கடைகளும் போதைக்குள் தான் வரும். கஞ்சா உள்ளிட்ட மற்ற போதைப்பொருளை கட்டுப்படுத்தும் அரசு மதுக்கடைகளையும் கணிசமாக குறைத்து திமுக ,அதிமுக நடத்தி வந்த மது கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

“நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல்” (திருக்குறள் 948)

என்கிறார் வள்ளுவர்.

எனவே குற்றங்களுக்கு அடிப்படை காரணமான அனைத்து வகை போதை வஸ்துக்களையும் தடுப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு கடுமையாக எடுக்க வேண்டும். இந்த நடவடிக்கை ஒரு புறம் எடுக்கப்பட்டு, இன்னொரு புறம் சிங்கப்பெண் அதிரடிப்படை செயல்பாடு இருக்கும் பட்சத்தில் நல்ல பலனை திட்டம் மூலம் பெண்கள் பெறுவார்கள். அப்போது, தமிழ்நாட்டுக்கு இது கம்பீரத்தைத் தருவதாகவும் நாட்டுக்கு ஒரு முன்மாதிரி திட்டமாகவும் இது இருக்கும் என்பது உறுதி.!



**இந்த அதிரடித் திட்டம் குறித்து விவரித்த முதலமைச்சர் விஜய், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நிகழ்வதற்கு அடிப்படை போதைதான் என்பதை சுட்டி காட்டியது குறிப்பிடத்தக்கது. எனவேதான் விஜய் தலைமையிலான அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதும் 717 டாஸ்மாக் மதுபானக் கடைகள் மூடப்பட்டது. வழிபாட்டு இடங்கள் மற்றும் பள்ளிக்கூடங்கள் அருகில் இவை இருந்தன என்று கூறப்பட்டாலும் தமிழ்ச் சமூகத்தை புரையோடச் செய்துவிட்ட போதைப் பழக்கத்திலிருந்து படிப்படியாக மக்களை மீட்க விஜய் மேற்கொண்ட முதல் கட்ட நடவடிக்கைதான் இது என்று அக்கட்சி வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது.**

மகளிரிடம் வரவேற்பை பெற்ற

# முதல்வர் விஜயின் 'சிங்கப்பெண்' படை

தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய், மகளிரின் பாதுகாப்பை உறுதி செய்ய, "சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை" திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளார். இது மகளிர் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

தவெக ஆட்சி அமைந்ததும், முதலமைச்சர் விஜய் முதலில் கையெழுத்திட்ட மூன்று கோப்புகளில் 'சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை உருவாக்கப்படும்' என்ற அறிவிப்பும் அடங்கும்.

இந்த திட்டத்தை முதலமைச்சர் மே 29ம் தேதி தொடங்கி வைப்பதற்கான ஏற்பாடுகள் சென்னையில் மேற்கொள்ளப்பட்டு இருந்த நிலையில், நிகழ்ச்சி தள்ளிப்போனது. இது எதிர்க்கட்சிகளின் விமர்சனத்திற்கு உள்ளானது.

இந்த நிலையில் கடந்த ஜூன் 9ம் தேதி இந்த திட்டத்தை முதல்வர் விஜய் தொடங்கி வைத்தார். அப்போது பேசிய அவர், "இந்த நிகழ்வு தன் மனதிற்கு நெருக்கமான ஒன்று" என்று தெரிவித்தார்.

ஆட்சிக்கு வந்த குறைந்த நாட்களிலேயே இந்த திட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வந்திருப்பதாக பேசிய விஜய், ''தமிழ்நாட்டில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் தன்னம்பிக்கையோடு இருக்க வேண்டும். அதற்கான முதல் படிதான் இந்த திட்டம்'' என்று கூறினார்.

முதல்வர் விஜய் பொறுப்பேற்றதும், நெடுஞ் சாலைப் பகுதிகள், பள்ளி மற்றும் வழிபாட்டு தலங்களுக்கு அருகே விதிகளை மீறி செயல்பட்டு வந்த 717 டாஸ்மாக் மதுபானக் கடைகளை மூட உத்தரவிட்டார். இது பெண்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. எனினும், விதிகளை மீறி மேலும் சில இடங்களில் டாஸ்மாக் மதுக்கடைகள் தொடர்ந்து இயங்கி வருவதாகவும் புகார் எழுந்தது. அதற்கு மாவட்ட அரசு நிர்வாகங்கள் துணை போவதாகவும், இதையும் முதல்வர் கண்காணித்து அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கேட்டுக் கொண்டனர்.




பெண்களுக்கு எதிரான குற்றம், போதைப்பொருள், சட்டம் ஒழுங்கு இவை மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது என்று முதல்வர் பேசியிருக்கிறார். இதை எப்படி சரிசெய்யப்போகிறோம் என்பதே அரசு முன்னெடுத்து செல்ல வேண்டிய அவசியமான பணி என்று விஜய் தலைமையிலான ஆட்சி நம்புகிறது. இது உண்மையில் சமூக சிந்தனை கொண்ட அரசின் பாராட்டப்பட வேண்டிய தொலைநோக்குத் திட்டமாகும்.

**ஜோதி நரசிம்மன்**

# நெல் கொள்முதல் முறைகேடுக்கு முற்றுப்புள்ளி வைக்குமா புதிய அரசு?




இராணிப்பேட்டை மாவட்டத்தில், இரவு பகலாக பாடுபட்டு நெல் விளைவிக்கும் விவசாயிகள், தங்கள் விளை பொருளை விற்பனை செய்ய முடியாமல் பெரும் வேதனைக்கு உள்ளாகி வருகின்றனர். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இயங்கி வரும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் (ஞிறிசி) மலிந்து கிடக்கும் லஞ்சமும், நிர்வாகக் குளறுபடிகளும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.

## மூட்டைக்கு ரூ.45 கட்டாயம்

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் விற்பனை செய்யும் விவசாயிகளிடம், ஒவ்வொரு நெல் மூட்டைக்கும் தலா ரூ.45 வீதம் கட்டாயமாக லஞ்சம் பெறப்பட்டு வருவதாக புகார்கள் எழுந்துள்ளன. நெல் மூட்டைக்கு ரூ.45 கொடுத்தால் மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்படும் என்ற எழுதப்படாத விதி உள்ளதாக குற்றம்சாட்டப்படுகிறது.

நெல் கொள்முதலை முறைப்படுத்தக் கொண்டு வரப்பட்ட "டோக்கன் முறை" தற்போது விவசாயிகளுக்கு பெரும் சாபமாக மாறியுள்ளது. பல இடங்களில் முறையான டோக்கன் வரிசை பின்பற்றப்படுவதில்லை. அதிகாரிகள், இடைத்தரகர்களும் சில நபர்களிடம் லஞ்சம் பெற்றுக்கொண்டு, அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நெல்லை கொள்முதல் செய்கின்றனர்.

நேர்மையாக டோக்கன் பெற்று வரிசையில் காத்திருக்கும் சாதாரண விவசாயிகள், தங்கள் விளை பொருளை விற்க பல மாதங்களாக காத்துக்கிடக்கும் அவல நிலை நீடிக்கிறது.

மழையில் வீணாகும் நெல் மூட்டைகள்

நெல் கொள்முதல் செய்யப்படாமல் பல இடங்களில் மூட்டைகள் தேங்கிக் கிடக்கின்றன. பல நிலையங்களில் போதிய உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாததால், மரத்தின் நிழலில், திறந்தவெளிகளில் நெல் மூட்டைகள் எடை



இடப்படுகின்றன. மழைக்காலத்தில் இந்த நெல் மூட்டைகள் முறையாகப் பாதுகாக்கப்படுகிறதா என்ற அச்சம் விவசாயிகளிடையே எழுந்துள்ளது. மழையில் நனைந்து நெல் முளைத்து விட்டால், தங்களுக்கு ஏற்படும் நஷ்டத்திற்கு யார் பொறுப்பு என்று விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

## அதிகாரிகள் அலட்சியப் போக்கு

இது குறித்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நியாயம் கேட்டால், “நெல்லை நிரப்புவதற்கு போதிய சாக்குப்பைகள் வரவில்லை” என்று அலட்சியமாக தெரிவிப்பதாக குற்றம்சாட்டுகின்றனர். அதிகாரிகள் இத்தகைய பொறுப்பற்ற பேச்சுக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளது.

## விவசாயிகள் எதிர்பார்ப்பு என்ன?

நெல் மூட்டைக்கு ரூ.45 வாங்கும் முறைகேட்டிற்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். டோக்கன் வழங்கும் முறையை முற்றிலும் வெளிப்படைத்தன்மையுடன் ஆன்லைன் மூலமாகவோ அல்லது கடுமையான கண்காணிப்பின் கீழ் முறைப்படுத்த வேண்டும்.

கொள்முதல் நிலையங்களில் போதிய சாக்குப்பைகளை இருப்பு வைப்பதோடு, மழையிலிருந்து நெல்லை பாதுகாக்க முறையான தார்ப்பாய்கள் மற்றும் சேமிப்புக் கிடங்கு வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும்.

ஆட்சி மாற்றத்திற்கு பிறகாவது விவசாயிகள் இந்த நீண்ட நாள் வேதனைக்கு விடிவுகாலம் பிறக்குமா? புதிய அரசு கோரிக்கைகளுக்கு செவி கொடுக்குமா என விவசாயிகள் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர். மொத்தத்தில், மாவட்ட நிர்வாகமும், தமிழக அரசும் இந்த விவகாரத்தில் உடனடியாக தலையிட வேண்டும் என்பதே இராணிப்பேட்டை மாவட்ட ஒட்டுமொத்த விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளது.

ஆட்சி மாற்றத்திற்கு பிறகாவது விவசாயிகள் இந்த நீண்ட நாள் வேதனைக்கு விடிவுகாலம் பிறக்குமா? புதிய அரசு கோரிக்கைகளுக்கு செவி கொடுக்குமா என விவசாயிகள் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர். மொத்தத்தில், மாவட்ட நிர்வாகமும், தமிழக அரசும் இந்த விவகாரத்தில் உடனடியாக தலையிட வேண்டும் என்பதே இராணிப்பேட்டை மாவட்ட ஒட்டுமொத்த விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளது.

# விளைச்சலும் இல்லை; விலையும் இல்லை



## சாலையோரங்களில் கொட்டப்படும் மாம்பழங்கள்

### போடி விவசாயிகள் வேதனை



தமிழகத்தில் மாம்பழ விவசாயம் மற்றும் உற்பத்தியில் மூன்றாம் இடத்தில் உள்ளது தேனி மாவட்டம். சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களுக்கு அடுத்த நிலையில், ஏற்றுமதி தரத்திலான மாம்பழங்கள் அதிகளவில் உற்பத்தியாவது தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் மற்றும் பெரியகுளம் சுற்றுப்பகுதிகளில் தான்.

தேனி மாவட்டத்தில் சுமார் 20,000 ஏக்கருக்கும் மேல் மாம்பழ விவசாய உற்பத்தி நடைபெற்று வரும் நிலையில் போடிநாயக்கனூர் சுற்று பகுதியில் மட்டும் சுமார் 7,000 ஏக்கருக்கும் மேல் மாம்பழ விவசாயம் நடைபெற்று வருகிறது.

இப்பகுதியில் கல்லா மாங்காய், காசா லட்டு மாங்காய், இமாம் பசந்த், காளாப்பாடி, சப்பட்டை, கிளி மூக்கு மாங்காய், செந்தூரம், அல்போன்சா எனக் கூடிய காதர், வாழைப்பூ என்று அழைக்கக் கூடிய நாட்டு ரக மாங்காய்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் தொடங்கி ஆகஸ்ட் மாதம் வரை மாம்பழ சீசன் நடைபெற்று



வருகிறது. ஏப்ரல் மே ஜூன் மாதங்கள் மாம்பழ சீசனின் உச்சகட்ட மாதங்களாகும்.

தமிழ்நாடு கேரளா எல்லை மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதியில் பெரும்பாலும் ஆற்று நீர் பாசனத்தில் இந்த மாம்பழங்கள் தனிச்சுவையுடன் கூடியதால் பல்வேறு மாநிலங்கள் மற்றும் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகி வந்தது.

குறிப்பாக இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு தமிழகத்தில் இருந்து மாம்பழம் ஏற்றுமதி நடைபெற்று வந்த நிலையில் கொரோனாவிற்கு பின்பு தற்போது மாம்பழ உற்பத்தி விவசாயம் மற்றும் விலை கடும் வீழ்ச்சியை சந்தித்து வருகிறது. கடந்தாண்டு விளைச்சல் அதிகளவில் இருந்த நிலையில் விலை இல்லாததால் டன் கணக்கில் மாம்பழம் கீழே கொட்டப்பட்டது.

ஆனால் இந்த ஆண்டு பருவமழை தவறியதால் விளைச்சல் குறைந்து சுமார் 20 சதவீதம் அளவே மாம்பழ உற்பத்தி நடைபெற்று வரும் நிலையில் கொள்முதல் விலையும் மிக குறைவாக கேட்கப்படுவதால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

மரத்திலிருந்து மாங்காய் இறக்குவதற்கு, கிலோவுக்கு ரூ.4 கூலி கொடுக்கப்படும் நிலையில், கல்லா மாங்காய் ரூ.5 முதல் ரூ.7 வரையிலும் செந்தூரம் போன்ற மாங்காய்கள் கிலோ ரூ.7 முதல் ரூ.10 ரூபாய் வரையிலும் மொத்தக் கொள்முதல் விலையாக கேட்கப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

குறிப்பாக மாம்பழ தொழிற்சாலைகளின் கொள்முதலுக்கு போக்குவரத்து செலவு உட்பட டன் ஒன்றுக்கு ரூ.15,000 செலவாகும் நிலையில் கொள்முதல் விலை ரூ.5,000 முதல் ரூ.6,000 வரை மட்டுமே கேட்கப்படுவதால் விவசாயிகள் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளனர். தற்போது உற்பத்தி செலவைக் காட்டிலும் மிகக்குறைவாக கேட்பதாலும் நேரடியாக கம்பெனிக்கு கொண்டு செல்லும் செலவு விவசாயிகளை சார்ந்தது என்பதால் பெரும் இழப்பை சந்திக்க வேண்டிய சூழல் உள்ளது. உற்பத்தியும் இல்லாத நிலையில் கொள்முதலும் குறைந்ததால் தினமும் மூட்டை மூட்டையாக மாம்பழங்கள் குப்பையில் கொட்டப்படுகின்றன.

இதே நிலை நீடித்தால் விரைவில் தேனி மாவட்டத்தில் மாம்பழ விவசாயம் மற்றும் உற்பத்தி முற்றிலும் அழிந்து விடும் என்றும் தற்போது அழிவின் விளிம்பு நிலைக்கு சென்று கொண்டுள்ளதாகவும் விவசாயிகள் வேதனை தெரிவித்தனர்.

